# மாக்ஸின் மெய்யியலும் போயபார்க் கருத்துரைகளும்

**பேராசிரியர். சோ. கிருஷ்ணராஜா**

19ஆம் நூற்றாண்டுச் சிந்தனையாளரான மாக்ஸின் கருத்துக்கள் 19ம் நூற்றாண்டின் இறுதியில் மாக்ஸிச மெய்யியலாக விருத்திசெய்யப்பட்டதுடன், 1931, 1945 ஆண்டுகளின் பின்னதாக கம்யூனிஸ்ட்கட்சிகளால் நிறுவனமயப்படுத்தப் பட்டது. சோஸலிச இயக்கத்தின் உலகநோக்காகவும்,உழைக்கும் மக்களின் வரலாற்றுப் பார்வையாகவும் மாக்ஸினது சிந்தனைகள் ஒழுங்குபடுத்தியமைக்கப்பட் டதுடன்,மாக்ஸே இதனது ஸ்தாபகராகவும் ஏற்றுக்கொள்ளப் பட்டது.எவ்வாறாயினும் சோஸலிசகருத்துநிலையும் மாக்ஸினது சிந்தனையும் மேற்குறித்தமுயற்சியில் சரிவர இணைக்கப்பட்டதென்பதற்கில்லை. மாக்ஸினது படைப்புகளிற்கும் அவரது பெயரால் செயற்பட்ட அரசியல் இயக்கங்களிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக எடுத்துக்காட்ட பலமுயற்சிகள் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும் மாக்ஸிச மெய்யியலென இன்றுகூறப்படுவதை மாக்ஸினது எழுத்துக்களிற் காணமுடியாது. மாக்ஸினால் பயன்படுத்தப்பட்ட மிகப்பொதுவானதும், மிகஅருபமானதுமான சொற்களின் அர்த்தம், அடிப்படை, சர்வவியாபகமான குணாம்சம் என்றவகையில் சோஸலிச இயக்க ஸ்தாபகர்களினால் மாக்ஸினது சிந்தனைகள் விரித்துரைக்கப் பட்டதுமல்லாது, மாக்ஸிச மெய்யியலென்ற கோட்பாட்டுருவமும் கொடுக்கப்பட்டது. மாக்சினது எழுத்துக்களிற் காணப்படுகின்ற மெய்யியற் சிந்தனைக்கும், பிற்காலத்தில் மாக்ஸிசமெய்யியல் என அறியப்பட்டதற்கும் இடையில் மிகப்பாரிய வேறுபாடுண்டு.

உதாரணமாக இயக்கவியற் பொருள் முதல்வாதம் என்ற கருத்தாக்கத்தைக் கவனிக்கலாம். கம்யூனிஸ்ட் கட்சிகளின் அதிகாரபூர்வமான மெய்யியலை இப்பதம் குறிக்கிறது. ஹென்றி லிபிவ்ரெ(Henri Lefebvre) போன்றவர்களாலும் இப்பதம் பயன்படுத்தப்பட்டது. *இயக்கவியல் முறை* என்றே மாக்ஸ் தன்முறையியலைக் குறிப்பிட்டார். ஏங்கல்ஸ் பொருள்முதல்வாத இயக்கவியல் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.1887ல் மாக்ஸினது சகசோஸலிச பிரசாரகராயிருந்த யோஸேப் டையட்ஜென் (Joseph Dietzgen) என்பாரே இயக்கவியல் பொருள்முதல் வாதம் என்றசொல்லை உருவாக்கியிருந்தார். எவ்வாறாயினும் ஏங்கல்ஸினது படைப்புகளை ஆதாரமாகக் கொண்டு, *பொருள்முதல்வாதமும் அனுபவமுதல்வாத விமரிசனமும் (1909)* (Materialism and Empirio-Criticism) என்றநூலை லெனின் எழுதினார். கேகலிய இயக்கவியலின் பொருள்முதல்வாத விளக்கம், ஒழுக்கவியற் தத்துவங்களை வர்க்கப்போராட்டத்துடன் தொடர்புபடுத்திய வரலாற்றுப் பார்வை, பௌதீகத்தில் கேல்ம்கோல்ட(Helmholtz), உயிரியலில் டார்வின்(Darwin), அரசியற் பொருளாதாரத்தில் கால் மாக்ஸ் ஆகியோரால் முன்மொழியப்பட்டவற்றை ஆதாரமாகக் கொண்டு மேற்படி கருத்தாக்கம் லெனினால் உருவாக்கப்பட்டது. வரலாற்றுவாத மாக்ஸிசம்(Labriola), கவுட்ஸ்கியின் (Kautsky) சமூக பரிணாமவாதத்தை ஒத்த நிர்ணயவாத மாக்ஸிசம் என்பனவற்றிற் கிடையிலானதொரு நிலைப்பாட்டை லெனின் எடுத்திருந்தார். சோவியத்புரட்சியின் பின் அந்நாட்டின் மெய்யியலானது இயக்கவியல் வாதிகள் (திபோரின்=Deborin), பொறிமுறையாளர் (Bukharin) என்ற இரு முகாம்களாகப் பிரிந்திருந்தது. இவ்விரு பகுதியினருக்கும் இடையிலான கருத்துமுரண்பாடுகள் 1931ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராயிருந்த ஸ்டாலினால் தீர்த்து வைக்கப்பட்டது. இயக்கவியல் பொருள் முதல்வாதத்தை மாக்ஸிச லெனினிஸ்சமாக ஸ்டாலின் எடுத்துரைத்தார். ஏழுவருடங்களின்பின் அது *இயக்கவியல் வரலாற்றுப்பொருள்முதல் வாதம்(1938)* என்ற கட்டுரையாக எழுதப்பட்டது. இயக்கவியல் விதிகளை தனித்ததொரு ஆய்வுத் துறையாக அக்கட்டுரை ஸ்தாபித்ததுடன், சிறப்புத்துறை விஞ்ஞானங்களிற்கான அதிலும் குறிப்பாக வரலாற்றிற்குரிய விஞ்ஞானப்பார்வையாகவும், உழைக்கும் மக்களின்சார்பில் அவ்வரலாற்றைச் சரியானமுறையில் விளங்கிக்

கொள்வதற்கான முன்னது ஏதுவான உத்தரவாதத்தையும் தருமொன்றாகவும் எடுத்துக்காட்டப்பட்டது. பல்வேறு எதிர்ப்புக்களின் மத்தியிலும் சோசலிஸநாடுகளின் முழுஅறிவுப்புலத்தின்மீதும் அந்தந்த நாடுகளின் கம்யூனிஸ்ட்கட்சிகளால் அக்கட்டுரைக் கருத்துக்கள் சுமத்தப்பட்டன. இது சோசலிஸநாடுகளின் விஞ்ஞானவளர்ச்சியிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. கம்யூனிஸ்ட்கட்சியரசு இயற்கைவிஞ்ஞான ஆராய்ச்சிகளைக் எவ்வாறு கட்டுப்படுத்தியதென்பதற்கு ஆதாரமாக லைசென்கோவின் போலிக் கண்டுபிடிப்புகளை உதாரணம் காட்டலாம். ஒருமுகமான செல்கதியைக் கொண்ட மாக்ஸிச மெய்யியலின் வளர்ச்சியில் இருவேறுதிருப்புமுனைகள் காணப்பட்டமைபற்றியும் இங்கு குறிப்பிடல் வேண்டும். மாவோ 1937ல் *முரண்பாடுகள்பற்றி* என்ற கட்டுரையில் இயக்கவியல் விதிகள் என்பதற்குப் பதிலாக முரண்பாட்டுத் தத்துவத்தின் சிக்கற் தன்மைபற்றிக் குறிப்பிட்டார். இத்தாலியில் கைமொண்ட்(Geymonat) என்பார் இயக்கவியற்பொருள் முதல்வாதத்தை வரலாற்றியலான அறிவாராய்ச்சியியலின் தொடக்கப் புள்ளியாகக் கொண்டார்.

இன்று மாக்ஸிசம் நிறுவனமயப்படுத்தப்பட்டதொரு கோட்பாடாக இல்லாதபொழுதும், 1890லிருந்து 1990வரை நிறுவனமயப்படுத்தப்பட்ட இயக்கமாகவும், சோசலிசஇயக்கத்தின் உலகநோக்காகவும் இருந்திருக்கிறது. மாக்ஸினது கோட்பாட்டுரீதியான சிந்தனை பல்வேறுசந்தர்ப் பங்களில் மெய்யியலாக இல்லாது, எதிர் மெய்யியலாக, நவீனகாலத்து மெய்யியற்சிந் தனைக்கு எதிரானதொரு போக்காகக் காணப்படுகிறது. மாக்ஸின் மெய்யியற் பயிற்சியானது பிளேட்டோ முதல் கேகல் ஈறானதாக இருந்தாலும், பொருள்முதல்வாத நிலைப்பாடுடையதாக, எப்பிகூறஸ் முதல் போயபாக் வரையிலான பொருள்முதல்வாதிகள் உலகை எவ்வாறு விளக்கினார்கள், மெய்யியலை எவ்வாறு பயன் படுத்தினார்கள், புரிந்து கொண்டார்கள் என்பது பற்றியதாகவே இருந்தது. மாக்ஸினது சமூகவரலாற்றுப் பகுப்பாய்வுகளும், அரசியல் நடவடிக்கைகளிற்கான அவரது முன்மொழிவுகளும் புலனறிவாத மெய்யியலாளர்களால் போதுமான அளவிற்கு விமர்சிக்கப்பட்டமை நாமறிந்ததே.
மாக்ஸினதுசிந்தனைகள் எந்தவொரு ஒழுங்குபடுத்தியமைக்கப்பட்ட மெய்யியற் தளத்திலும் இயங்க வில்லை. மெய்யியலிற்கு அப்பால் மேற்கொண்டு எவ்வாறுசெயற்படுவது என்ற தளத்தையே இலக்காகக் கொண்டிருந்தது. *18ம் புருமெர் லூயி போனப்பாட்* என்ற மாக்ஸினது நூலில் வருகிறதொரு குறிப்பே மாக்ஸஸின் வரலாற்றுப்பொருள்முதல்வாதத்திற்கு சான்றாக பலராலும் எடுத்துக்காட்டப்படும் வாக்கியமாகும்[1].

*மனிதர் தமதுவரலாற்றைத் தாமாகவே உருவாக்கிக் கொள்கிறார்கள். இவ்வுருவாக்கம் அவர்களது சொந்தவிருப்பத்தின் பேரிலோ அல்லது தாமாகத் தெரிவு செய்துகொண்ட சூழ்நிலையிலோ அல்ல. தாம் எதிர்கொள்ளும் புறச்சூழ்நிலையின் அடிப்படைக்கேற்பவே தமதுவரலாற்றை அமைத்துக் கொள்கிறார்கள்.*

மேற்படி மாக்ஸினது கூற்றை அவரது நிலைப்பாட்டிலிருந்து புரிந்துகொள்ள முயற்சிப்போமாயின் புறச் சூழலினாலே எல்லாமனிதர்களினதும் நடத்தை தீர்மானிக்கப்படுகிறதென்றும்,சமூகமுரண்பாடுகளில் எந்தப்பக்கம் அவர்கள் நிற்கிறார்களோ அப்பக்கத்திற்கேற்பவே அவர்கள் எவ்வாறு நடந்துகொள்வார்கள்என்பது தீர்மானிக்கப் படுமென்ற முடிவையடையலாம். மேலும் இத்தகையபுரிந்துகொள்ளல் மூலமே மாக்ஸினது மெய்யியல் பற்றிய விளக்கத்தையும், அதன் உள்ளடக்கம், பாணி, முறையியல், அதன் அறிவார்ந்ததும் புத்திபூர்வமான செயற்பாடுகள் பற்றிய விளக்கத்தையும் பெறலாம். மெய்யியலின் நடைமுறையை மாற்றியமைப்பது பற்றியே மாக்ஸ் பேசுகிறார். இதனாலேயேதான் மெய்யியல் மாக்ஸிற்குமுன் இருந்தபோல அவரின் பின்னில்லை என்ற முடிபிற்கு நாம் வருகிறோம். இவ்வாறு ஒருபயில்துறையின் அடிப்படையை முழுமையாக மாற்றியமைத்தது மாக்ஸ் மட்டுமல்ல, பிராய்ட்கூட அத்தகைய தொருமாற்றத்தை உளவியலில் ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. மாக்ஸினது எதிர்-மெய்யியல் நிலைப்பாடு மெய்யியலை இறந்துபோகச் செய்யவில்லை. மாறாக மெய்யியலிற்கொரு புதிய பாதையைச் செப்பனிட்டுத் தந்தது. மெய்யியலின் நோக்கத்தையும், அதுஆராயும் பிரச்சனைகளின் தன்மையையும் பாரம்பரியநிலைப்பாட்டிலிருந்து இடம்மாற்றி வைத்தமையே மாக்ஸினது பங்களிப்பாகும்.

மாக்ஸினது எதிர்மெய்யியல் நிலைப்பாட்டிற்கு ஆதாரமாயிருந்த சிந்தனை எதுவென்பது பதிலளிக்க முடியாத நிரந்தரப் பிரச்சனையாகும். மாறாத நிலைப்பாடுகளென மெய்யியலில் எதுவுமில்லை. திருப்பு முனைகள் பல மெய்யியல் வரலாற்றில்

ஏற்பட்டுள்ளனவென்பது உண்மையே எனினும் மெய்யியலாளர்கள் மீண்டும் பின்நோக்கி தொடக்கநிலைக்குச் செல்வதில்லை. *நதிகள் பின்நோக்கிப் பாய்வதில்லை* என்பதுபோலவே மாக்ஸின் சிந்தனைக்கான மூலத்தை அவருக்கப்பால் தேடுவதும் அபத்தமானது. மெய்யியலை மாக்ஸ் இடம்மாற்றிவைத்ததுமல்லாது, மெய்யியலின் நோக்கம், அது ஆராயும் பிரச்சனைகள் எல்லாமே அவரால் மாற்றமடைந்தது. மெய்யியலாளர் இதனை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம், ஆனால் பாராமுகமாயிருத்தல் இயலாது.

மாக்ஸினது மெய்யியலின் மூலம் யாதென்பது தொடர்பாக மாக்ஸிஸ்ட்டுக்களிடையே நிகழ்ந்த வாதப் பிரதிவாதங்கள் மிகவும் சுவையானவை. மாக்ஸிஸம் ஒரு உலகநோக்கு என்ற வகையில் அது ஜேர்மானியமெய்யியல், பிரெஞ்சுசோசலிஸம், பிரித்தானிய அரசியற் பொருளாதாரம் என்ற மூன்று கூறுகளைக் கொண்டதாக மாக்ஸிஸ்டுக்களால் விளக்கப்பட்டது. டூறிங்க்கு மறுப்பு (Anti-Duhring)என்ற நூலில் பொருள்முதல்வாதம்-இலட்சியவாதம், பௌதீகவதிதம்-இயக்கவியல் என்பனவற்றிற்கிடையிலான முரணிசைவின் வரலாற்றுரீதியான தன்மையை வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பற்றிய தனதாய்விற்காக மேலெழுந்தவாரியாக மாக்ஸ் ஆராய்ந்திருந்தார். இவ்வாய்வு கவுட்ஸ்கி என்பாரால் 1907ல் ஒருவிரிவுரையின் பொழுது ஒழுங்குபடுத்தப்பட்டு, மாக்ஸிஸத்தின் மூன்று ஊற்றுக்களெனப் பெயரிடப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் பெற்ற மாக்ஸினது படைப்பு சமூகம்பற்றிய விஞ்ஞானமென்றும், அது பாட்டாளி மக்களின் நிலைப்பாட்டிலிருந்து ஆரம்பிக்கிறதென்றும், ஜேர்மானிய,பிரெஞ்சு,பிரித்தானிய சிந்தனைகளிலிருந்து தோற்றம் பெறுகிறதென்றும் குறிப்பிட்டார். ஐரோப்பியக் (சர்வதேசிய) குணாம்சம் மாக்ஸிஸத்திற்கு உண்டென்பதை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனேயே கவுட்ஸ்கி இவ்வாறு குறிப்பிட்டார். அதாவது ஐரோப்பியவரலாற்றின் ஒட்டுமொத்தமான வளர்ச்சியின் பெறுபேறே பாட்டாளி வர்க்கக் கோட்பாடென கவுட்ஸ்கியினால் எடுத்துக்காட்டப்பட்டது. இதனை லெனின் மாக்ஸிஸத்தின் மூன்றுஅடிப்படைகளும் மூன்று கூறுகளுமென 1913ல் ஒருவிரிவுரையின் பொழுது வியாக்கியானம் செய்தார். முப்பெரும் நாடுகளின் பொதுப்பண்பை ஐரோப்பியப் பண்பாடாக உருவகிக்கும் இவ்வைதீகம், கவுட்ஸ்கியினால் உருவாக்கப்பட்ட புதியதொருதோற்றப்பாடல்ல, ஐரோப்பாவின் முப்பெரும்நாடுகளைச் சுட்டும் மேற்படி ஐதீகத்தை ஏலவே 1841ல் மோஸஸ் கேஸ்(Moses Hess) என்பாரும் பயன்படுத்தியுள்ளார்.

மாக்ஸினது சிந்தனைக்கு சூட்டப்பட்ட இவ்வைதீகத்தினாலேயே அவரது சிந்தனையின் *தோற்றுவாய்*
பிரச்சனையாகிறது. அதாவது முந்திய கோட்பாடுகளிற் இல்லாத சிறப்புரிமை மாக்ஸினது சிந்தனைக்கு கிடைத்திருக் கிறதென்ற வாதத்தை மேற்படிகருத்து முன்னிறுத்துகிறது. ஆனால் இதுவொரு தீர்க்கப்படமுடியாப் பிரச்சனையாகும். உதாரணமாக 1990ல் கொன்ஸ்ரானோ பிறீவ் (Constanzo Preve) என்பார் மாக்ஸ்ஸினது சிந்தனைக்கு மூன்றுஅடிப்படைகளல்ல, மாறாக நான்கு ஆசான்களே உதவியிருந்தனரென்ற வாதத்தை முன்மொழிந்தார்[2]. இவரது அபிப்பிராயப்படி எப்பிகூரஸ் (மாக்ஸ்ஸினது கலாநிதிப்பட்ட ஆய்வு எப்பிகூரஸ் டெமோக்கிரட்டீஸ் என்போர்களது இயற்கைமெய்யியல் பற்றியது), ரூஸோ (மேட்டுக்குடிகளின் சனநாயகம் அல்லது பிரசைகளின் பொதுச்சித்தத்தின் பேறான நேரடிப்பங்குபற்றல் என்ற கருத்து), அடம்ஸ்மித் (உழைப்பாளியே சொத்தின் அடிப்படை உன்ற கருத்து), கேகல் (வளர்ச்சி பற்றிய இயக்கவியற் சிந்தனை) என்ற நால்வரினதும் பங்களிப்பு உண்டென்றார். மேற்படி பிறீவினது ஆய்வுகள் மாக்ஸினது படைப்புக்களின் உள்ளார்ந்த சிக்கற்தன்மையை நாமறிந்துகொள்ளவும், மெய்யியல் மரபுடன் அவர் கொண்டிருந்த விமரிசனப்பாங்கிலான அணுகுமுறையில் ஏற்பட்ட பாச்சல்களையும் புரிந்துகொள்ள உதவும்.

எவ்வாறாயினும், மாக்ஸினது எழுத்துகளை மெய்யியல் சார்ந்தது, வரலாறுசார்ந்தது, பொருளாதாரம் சார்ந்ததென பிரித்துப்பார்த்தல் தவறாகும். மேலும் அவ்வாறு பிரித்துப்பார்த்தல் மாக்ஸ் பற்றிய சரியான பார்வையையும் தராது. அதுமட்டுமல்ல, மாக்ஸ் சார்ந்திருக்கும் மெய்யியல் மரபையும், அவரது புரட்சிகர நிலைப்பாட்டையும் புரிந்து கொள்வதற்கு இது இடையூறாகவிருக்கும். 1843ல் கேகலின் *உரிமையின் மெய்யியல் (Philosophy Of Right)*[3] என்ற நூலின் பக்கங்களில் சமூகம்,அரசு, என்பனபற்றிய கேகலின் கருத்துக்கள் தொடர்பாக தனது விமரிசனங்களையும், புரட்சிகர ஜனநாயகம் பற்றிய தனது கருத்துக்களையும் மாக்ஸ் எழுதியிருந்தார். இக்குறிப்பு பின்னர்கட்டுரையாக சர்வதேச உழைக்கும் மக்கள் அமைப்பின் உட்கட்சிக் கலந்துரையாடலிற்காக வெளியிடப்பட்டது. மாக்ஸினது ஆக்கங்களில் மிகவும் காரசாரமான விவாதங்களைத் தோற்றுவித்த

இக்கட்டுரையில், முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சி பற்றிய கோட்பாட்டுரீதியான நிலைப்பாட்டிற்கும், பூர்சுவாசமூகத்தின் மெய்யான வரலாற்றிற்கும் இடையிலான தொடர்பை அவதானித்ததில் இருந்து இயக்கவியல் பற்றிய தனது விளக்கத்தை மாக்ஸ் வெளியிட்டிருந்தார். இவ்விளக்கம் கேகலின் வளர்ச்சி பற்றிய இயக்கவியலின் மறுபதிப்பாக இல்லாது, மாக்ஸினது சுயவிளக்கமாகவே இருந்தது.

அடிப்படையில் மாக்ஸ் ஒருபுதிய சகாப்தத்தின் மெய்யியலாளராகவே இருந்தார். பூர்த்தியுறா வரைவுகளையும், திட்டங்களையும் அவர்விட்டுச் சென்றுள்ளார். அவரது நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களைப் புறந்தள்ளி அவரது சிந்தனையின் உள்ளடக்கத்தை விளங்கிக்கொள்ள முடியாது. இதன்காரணமாகவே மாக்ஸின் சிந்தனைகளை அருபநிலைப்பட்ட மெய்யியலாகப் பயிலமுடிவதில்லை. எனவே அவரது மெய்யியலை, அவரது சிந்தனையில் ஏற்பட்ட முறிவு, மாற்றம் வேறுபாடு என்பனவற்றை உள்ளடக்கியே புரிந்துகொள்ள வேண்டும்.

மாக்ஸினது சிந்தனைகளில் 1845ஐ அண்டியகாலப்பகுதியில் ஒருஇடைவெளி அல்லது முறிவு காணப்படுகிறதென்ற அபிப்பிராயம் அல்துாஸர் தொடக்கிவைத்த விவாதங்களின் பயனாக 1960-70களில் ஏற்பட்டது[4]. சிலர் இதனை ஆதரித்தும் வேறுசிலர் இதனை மறுதலித்தும் வாதிடலாயினர். 1845ஸிற்கு முந்தியகாலப் பகுதியில் மாக்ஸினது சிந்தனையில் மானிடநலவாதமே முதன்மை பெற்ற சிந்தனையாக இருந்தது. ஆனால் 1845ஸிற்கு பிந்தியகாலப்பகுதியிலோ சமூகஉறவு என்ற கருத்தாக்கமே மாக்ஸின் சிந்தனையில் முதலிடத்தைப் பெற்றது. இக்காலத்தில் மாக்ஸ் நேரடியாகப்பெற்ற அரசியலனுபவங்களால் - குறிப்பாக ஜேர்மனி-பிராண்ஸ் ஆகிய நாட்டுப்பாட்டாளிகளின் நிலைநின்று சமூகப் போராட்டங்களில் செயலூக்கமுடன் ஈடுபட்டார். (ஏங்கல்ஸ்க்கு ஆங்கிலநாட்டுப் பாட்டாளிகளின் நிலைமை இத்தகைய அனுபவத்தைத் தந்தது). இது அவரது புலமைசார் மெய்யியல் ஆர்வத்திற்கு முற்றிலும் எதிரானதாயிருந்தது. எவ்வாறாயினும், மாக்ஸினது வாழ்க்கைக்காலத்தில் ஐரோப்பாவில் இடம்பெற்ற இருசம்பவங்களிற்கும் அவரது சிந்தனையிலேற்பட்ட மாற்றத்திற்கும் தொடர்பிருந்தது. மாக்ஸ்ஸினது நிலைப்பாட்டிற்கு இச்சம்பவங்கள் சவாலாயிருந்தாலும், அதனை எதிர்கொள்ளும் நம்பிக்கை அவரிற்கிருந்தது. தனதுசிந்தனையின் அடிப்படைகளை மீள்பரிசீலனை செய்ததன்மூலம் அவற்றைப் பாதுகாக்க முடிந்தது.

மாக்ஸினது சிந்தனையில் ஏற்பட்ட முதலாவது நெருக்கடி 19ம் நூற்றாண்டுச் சிந்தனையிற் காணப்பட்ட சகாப்தமாற்றத்துடன் அதாவது 1848ம் ஆண்டுப்புரட்சியின் தோல்வியுடன், பக்கம்பக்கமாக நிகழ்ந்தது. முதலாளித்துவத்தின் நெருக்கடி தவிர்க்கமுடியாதென்ற நிலைப்பாட்டுடன் மாக்ஸ் முழுஉடன்பாடு கொண்டிருந்தார். இதனை 1847ல் எழுதப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை வாசிப்பதன்மூலம் கண்டுகொள்ளலாம். பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் எல்லாநாடு களிலுமுள்ள அனைத்து வர்க்கங்களும் ஒன்றுதிரண்டு புரட்சிகரஜனநாயகத்தை ஸ்தாபிக்கவும், அதன்மூலம் வர்க்கபேதங்கள் ஒழிக்கப்பட்டு கம்யூனிசம் ஸ்தாபிதமாகுமெனவும் நம்பினார். தனது திட்டத்தை சமூகக் குடியரசுவாதிகளினதும் மக்களினதும் ஆட்சிமாற்றத்திற்கான ஆர்வச்செறிவு அமுலாக்குமென மாக்ஸ் நம்பியிருந்தார்.

ஆனால் பிரான்ஸில் நடந்தேறிய நிலைமைகளோ மாக்ஸிற்குப் பெரும் அதிருப்தியைத் தந்தது. பிரெஞ்சு சோசலிஸ்டுக்களில் ஒருபிரிவு ஆட்சியாளர்க்குச் சாதகமாகப் பிரிந்து சென்றமையும், சதிப்புரட்சியின்போது தொழிலாளர்களின் செயலற்ற நிலைமையும், யூன் படுகொலைகளின்பொழுது அவர்கள்பாதிக்கப்பட்ட நிலையும், நம்பிக்கையற்ற நிலைமையைத் தோற்றுவித்தது. இதனால் பாட்டாளி மக்களினதும்,அவர்களது வரலாற்றுப்பாத்திரமும் பற்றிய மாக்ஸினது நிலைப்பாடு ஆட்டம் கண்டது. மேற்படி வரலாற்றுநிலைமைகள் அவரது கோட்பாட்டுரீதியான சிந்தனையில் பாரியதாக்கத்தை ஏற்படுத்தியது. வர்க்கசமூக அமைப்பிலிருந்து வர்க்கபேதமற்ற சமூகத்தை அடைவதற்கான உள்ளார்ந்தமாற்றத்தை வெளிப்படுத்தும் 'நிரந்தரப்புரட்சி' என்ற கருத்தாக்கத்தையும், முதலாளித்துவ சர்வாதிகாரத்திற்குப் பதிலாக பாட்டாளிகளின் சர்வாதிகாரம் என்ற அரசியற் திட்டத்தையும் கைவிடச்செய்தது. அதாவது மாக்ஸை அவரது கருத்து நிலை தொடர்பான மயக்கத்திலிருந்து விடுவித்ததுமட்டுமல்லாது, பொருளாதார நிர்ணயிப்பிலான அரசியலூாகங்கள் பற்றியும், சமூகபரிணாமத்தின் நீண்டகாலப்போக்குகள் பற்றியும் திட்டவட்டமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் உதவியது. அரசியற் பொருளாதாரம் பற்றிய விமரிசனரீதியான அணுகுமுறை பற்றியும், அதற்கான கோட்பாட்டடிப்படைகளை முழுமைப்படுத்துவதற்குமான முயற்சிகள் மாக்ஸினால் தொடங்கப்பட்டன. 1867ல் மூலதனத்தின் முதலாம்

பாகம் வெளிவரும்வரை மாக்ஸினது முயற்சி தொடர்ந்தது.

1870ல் பிராண்ஸ்-பிரஸ்ஸியா யுத்தம் பரிஸ் கம்யூனைத் தொடர்ந்து நடைபெற்றது. வரலாற்றின் துயரம்மிக்க பக்கமாக அதனை வருணித்தார். காரணமில்லாக் காரணமும், யுத்தத்தின் பிற்போக்குத் தனமான பாதிப்புகளும், அதற்கான மனித இழப்புகளும் மாக்ஸ்சை மிகவும் பாதித்தது (யுத்தத்தில் 10,000 பேர் இறந்தனர். பிறிதொரு 10,000 பேர் கொல்லப்பட்டனர். இவைதவிர பெருந்தொகையானோர் நாடுகடத்தப்பட்டனர்). ஒரு25ஆண்டுகளிற்குள் இரண்டாவது தடவையாக புரட்சிகர உழைப்பாளிகள் பிராண்ஸில் கொலைசெய்யப்பட்டமையும் ஏனையநாடுகளில் அவர்கள் எதிர்கொண்ட அச்சவுணர்வும் மாக்ஸைப் பாதித்தது. அரசியல் முரண்பாடுகளையும், அம்முரண்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் சக்திகள் தொடர்பாகவும் மாக்ஸ் கொண்டிருந்த கருத்துக்களிற்கு நேரெதிராக ஐரோப்பாவில் நடந்தேறியநிகழ்ச்சிகள் காணப்பட்டன. இதன் காரணமாக ஒப்பீட்டளவில் வர்க்கப்போராட்டத்தின் முதன்மைஸ்தானம் குன்றியதுடன் ஏனைய அம்சங்களின்பால் மாக்ஸ் அதிகஅக்கறை கொண்டது போலத் தெரிகிறது. மூலதன வாக்கத்தினால் தோன்றும் நெருக்கடி காரணமாக எழவேண்டிய தொழிலாளர்புரட்சி பிரித்தானியாவில் ஏற்பட வேண்டியதற்குப் பதிலாகப் பிராண்ஸில் ஏற்பட்டமை தனது தருக்கத் திட்டத்திற்கு முரண்பட்டதாயிருந்தமையும் மாக்ஸினால் உணரப்பட்டது. பலாத்காரத்தைப் பயன்படுத்துவதிலும், அரசியற் தந்திரோ பாயங்களிலும் பாட்டாளிவர்க்கத்திலும் பார்க்க பூர்சுவாக்களின் ஆற்றல் மேலோங்கிய நிலையுடையதென்ற பாடம் பாரிஸ் கம்யூன் நசித்தொழிக்கப் பட்டமையிலிருந்து கிடைத்தது.

மாக்ஸ் இதனையெல்லாம் எதிர்கொண்டா ரென்பதில் எதுவித ஐயமுமில்லை. பாட்டாளிகளின் அரசு தோற் கடிக்கப்பட்டாலும், குறுகியகாலத்துப் பரிசோதனையாக அவர்களது ஆட்சி இருந்தபொழுதும், அவை பற்றிய படிப்பினைகளினூடாக உழைக்கும் மக்களின் அரசு என்ற தனதுகண்டுபிடிப்பு நிறுவனரீதியாக வல்லதிகாரக் குறைபாடுடையதாயிருந்ததை உணர்ந்துகொண்டார். அக்காலத்தில் சோஸலிசக் கட்சிக் கூட்டங்களிலெல்லாம் *பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம்* என்ற புதியதொரு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அதன்மூலம், பாரம்பரியமாக ஸ்தாபிதமாகி வளர்ந்துவந்த அரசயந்திரத்தைத் தகர்ப்பதன் மூலம் பூர்சுவாக்களின் உரிமையென்பதற்கெதிராக *கம்யூனிசதத்துவத்தை* முன்மொழிந்தார். அதிருப்திதரும் உள்முரண்பாடுகளால் முதலாவது அகிலம் மாக்ஸால் 1852ல் கலைக்கப்பட்டது. மூலதனம் என்ற நூலின் முதல்வரைவு இடைநிறுத்தி வைக்கப்பட்டதுடன், தனது சமூகப்பரிணாமக் கோட்பாட்டை திருத்தியமைத்துக்கொள்வதற்காக மேலதிகவாசிப்புகள் தேவைப்பட்டதால் அதில் மாக்ஸ் ஈடுபட்டார். அத்துடன் ரஷ்சியமொழி, கணிதம் என்பனவற்றையும் பயிலத்தொடங்கினார். இதனால் மாக்ஸினது அரசியல் நடவடிக்கைகளும் இடைநிறுத்திவைக்கப்பட்டன.

பாரம்பரியமாக மெய்யியலை அதன் தோற்றுவாயான சூழலிருந்து பிரித்துப்பார்க்கும் முயற்சிக்கெதிராக மாக்ஸ் போராடியதை அவரது நூல்கள் அனைத்திலும் காணக்கூடிய தாயிருப்பதுடன், இம்முயற்சியே மாக்ஸினது மெய்யியலின் விதிவிலக்கான தன்மையை வெளிக்காட்டுகிறது, ஒருவகையில் அவரது அனுபவமுமாக இது இருந்தது. மெய்யியல் பற்றிய பாரம்பரிய விளக்கத்திலிருந்து மாக்ஸ் எவ்வாறு வேறுபடுகிறாரென்பதை போயபார்க் பற்றிய மாக்ஸினது கருத்துரைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்[5].

இக்கருத்துரைகள் பிரசுரத்திற்காக எழுதப்பட்டவையல்ல. நடைமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்தல், உலகைமாற்றுதல், சமுகத்தைமுன்னிலைப்படுத்தல், புரட்சிகர நடைமுறைக்குப்பதிலாக வேறுவழி முறைகள் மெய்யியலிற்கில்லை என மெய்யியல் தொடர்பான புரட்சிகரசிந்தனையைக் கொண்டவராக மாக்ஸ் காணப்படுகிறாரென்பதையே இக்கருத்துரைகள் புலப்படுத்துகின்றன. சமூகத்தை இருந்தவாறு விளக்குவதல்ல, அதனை மாற்றுவதே முக்கிய பணியாகும் சூத்திரங்களின் வடிவிற் தரப்பட்ட இக்கருத்துரைகள் விமரிசனரீதியான வாதங்களிற்கான புறவரைவுகளாயுள. இக்கருத்துரைகள் தமதமைப்பில் ஜெர்மானிய மெய்யியலின் கலைச்சொற்களைப் பயன்படுத்துவதால், தற்காலமெய்யியலாளர்க்கு சிரமத்தைத் தருவதாயிருப்பினும், புரட்சிகரநடை முறைக்கான கோட்பாட்டுரீதியான பாய்ச்சலாகவுளது. 1845 மாச்சளவில் இக்கருத்துரைகள் எழுதப்பட்ட காலை, மாக்ஸ் ஒருஇளம் புத்திஜீவியாகவும், ரைன் பத்திரிகையின் ஆசிரியருமாயிருந்தார். பொலிஸ் கண்காணிப்பிற்குட்பட்டவராயுமிருந்தார்.

ஒருவகையில் தொடர்ச்சியான உந்தல்களைத் தருவதற்கான மாக்ஸின் ஞாபகக்குறிப்புகளாய் இக்கருத்துரைகள் உளதெனலாம். இதற்குச் சிறிதுமுந்தியகாலத்திலேயே 1844ம் ஆண்டின் பொருளாதார-மெய்யியற் கையெழுத்துப்பிரதி என்றபெயரில் பிரசுரமான கையெழுத்துப்பிரதியை எழுதுவதில் மார்க்ஸ் ஈடுபட்டிருந்தார். மனித உழைப்பானது கூலியுழைப்பு என்றவடிவத்தில் உழைப்பாளியிலிருந்து எவ்வாறு அன்னியப்பட்டுள்ளது என்ற விடயம் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது. ரூஸோ, போயபார்க், புருதோன், கேகல் ஆகியோரின் மெய்யியற்சிந்தனைகளும், அடம்ஸ்மித், றிக்காடோ ஆகியோரின் பொருளியற் சிந்தனைகளும் இக்கால மாக்ஸில் செல்வாக்குச்செலுத்தியது. இதன்காரணமாக இயற்பண்புவாதம், மானிடவாதம் ஆகியவற்றின் செல்வாக்குக்குட்பட்ட கம்யூனிஸ நிலைப்பாடுடையவராகக் மாக்ஸ் காணப்பட்டார். இயற்கை, உழைப்பு என்பனவற்றிலிருந்து மனிதன் அன்னியப்படுதலை இல்லாதொழிப்பதற்கு தனிச்சொத்துடமை இல்லாதொழிக்கப்பட வேண்டுமென்ற முடிவிற்கு இக்காலப்பகுதியில் வந்தார்.

இதேகாலப்பகுதியில் ஏங்கெல்ஸ்சுடன் இணைந்து The German Ideology என்றநூலை எழுதவேண்டி இருந்ததால், கையெழுத்துப்-பிரதியில் குறிப்பிட்ட முன்வரைவுத்திட்டத்தில் காணப்பட்ட விடயங்கள் பற்றிய விரிவானஆய்வு இடைநிறுத்தப்பட்டது. The German Ideology முக்கியமாக இளம் கேகலியவாதிகளிற்கு எதிரான விமரிசனமாயிருந்தது. குறிப்பாக லுட்விக் போயபார்க், புரூணோ, போர், மார், ஸ்ரேயினர் என்பவர்களிற்கெதிரானதாய் இருந்தது. போயபார்க் பற்றிய கருத்துரைகள் இத்தகைய-சந்தர்ப்பத்திலேயே எழுதப்பட்டது. இதனாலேயே அது The German Ideologyயின் பின்னி-ணைப்பாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். அல்துாஸரின் அபிப்பிராயப்படி மானிட வாதத்திலிருந்து மாக்ஸ் மாறுகிற காலகட்டத்தை மேற்படிகருத்துரைகள் குறிப்பிடுகின்றன. இவரது அபிப்பிராயப்படி 1844ம் ஆண்டுக் கையெழுத்துப்பிரதி மாக்ஸின் மானிடவாத நிலைப்பாட்டிற்குரிய சிந்தனைகளை வெளியிடுகிறது. ஆனால் The German Ideology என்ற நூலோ மானிடவாத நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டு, சொத்து, அரசு என்பனபற்றிய ஆய்வுகளினூடாக உழைப்புப்பிரிவினைக் கோட்பாடு பற்றிய ஆய்வுகளிற்கு மாக்ஸ் செல்லுவதைப் புலப்படுத்துகிறது. ஜேர்மானியக் கருத்தியல் பற்றிய ஆய்வுகளிலிருந்தே வரலாறு பற்றிய மாக்ஸினது விஞ்ஞான அணுகுமுறை ஆரம்பமாகிறதென அல்தூஸர் வாதிடுகிறார். போயபார்க் கருத்துரைகள் இம்மாற்றத்தை தொடக்கிவைக்கிறதெனவும் குறிப்பிடுகிறார்.

போயபார்க் கருத்துரைகளையும், அவற்றின் வியாக்கியானங்களையும் ஒருசேர ஆராய்ந்தால் இக்கருத்துரைகள் ஒரு புதியநடைமுறைப் பொருள்முதல்வாதம்பற்றிப் பேசுவதை நாம் அவதானிக்கலாம். இலட்சியவாதம் பொருள்முதல்வாதம் எனப் பாரம்பரியமாக இரண்டுபட்டு நின்ற மெய்யியலாய்வில் பொருள்முதல்வாத நிலைநின்று இலட்சியவாதத்தை அதிலும் குறிப்பாக கேகலிய இலட்சியவாதத்தை விமர்சிக்கிற அதேவேளை பாரம்பரிய பொருள்முதல்வாதத்தை விமரிசனரீதியாக அணுகியதன் மூலம் அதன் குறைபாடுகளை அகற்றியதொன்றாகவும் காணப்படுகிறது.

The Essence of Christianity (1841) என்ற நூலில் சமயம் எவ்வாறு மனிதனைத் தன்னியல்பிலிருந்து அன்னியமாக்கிறதென்ற விளக்கத்தை போயபார்க் எடுத்துக்காட்டினார். பூரணத்துவம், இரட்சிப்பு என்ற தன்னியல்புகளை புலன்கடந்த உலகின் பொருளொன்றில் எறியப்படுத்தி, அக்கற்பனைப் பொருளை மனிதன் வழிபடுகிறான். (அதாவது சமயம் மனிதனை அன்னியப்படுத்துகிறது). இத்தவறினை மனிதன் உணர்ந்துகொள்வதன்மூலம் தன் சாராம்சத்தை மீளமைத்துக்கொள்ளலாம். இறைவனிடம் கொடுத்ததை மீளப்பெறுவதன் மூலம் மனிதர்[6] சகோதரத்துவத்துடன் பூமியில் வாழலாமென போயபார்க் எழுதினார். சமயத்தால் அன்னியமான மனிதன் என்ற போயபார்க்கினது கருத்தைக் காட்டுருவாகக் கொண்டு மாக்ஸ் முதலான விமரிசனமெய்யியலாளர்கள் அனைவரும் பிறதுறைகளில் எவ்வாறு மனிதசாராம்சம் அன்னியப்பட்டுப் போய்விட்டதென ஆராயத்தலைப்பட்டனர். கற்பனாவாத சோசலிஸ்டுக்களும் சமூகத்திலிருந்து அன்னியப்படுத்தப்பட்ட முறையிலேயே அதாவது மனிதஇயல்பை அன்னியப்படுத்திய முறையிலேயே இலட்சியசமூகம் பற்றிப் பேசினர்.

மாக்ஸ் சமூகத்தைத் தொடர்புபடுத்தி அன்னியமாதல்பற்றிப் பேசினார். போயபாக் கருத்துரைகளில் இது புலனாகிறது. சமூகத்தில் ஒருபிரிவினர் பிறிதொருபிரிவினர்க்கெதிராக செயற்படுவதும், அரசியல் முரண்பாடுகளுமே

மனிதரைச் சமயத்தில் அடைக்கலம் தேடவைக்கிறது. ஒருபிரிவினர் மறுபிரிவினரில் தங்கியிருக்கும் நிலையை புரட்சிகர நடைமுறைமூலம் மாற்றுவதே அன்னியமாதல் நீங்குதற்குரிய ஒரேவழிமுறையாகும். அன்னியமாதலிற்கு முடிவுகட்ட மெய்யியலால் முடியாது. அதுபுரட்சியின் மூலமே சாத்தியமாகும். தனிமனிதர்களின் பொருளாதார நிலைப்பாடுகளும், அவர்களின் சமூகஉறவுகளும் புரட்சிகர நடைமுறைமூலம் மாற்றப்படுவதாலேயே அன்னியமாதல் அகன்றுவிடுமென போயபார்க் கருத்துரைகள் உணர்த்திநிற்கின்றன.

மெய்யியலாளர்கள் இதுவரை உலகை விளக்கினார்கள். அதனைமாற்றுவதே எம்முன்னுள்ள பிரச்சனையாகுமென்ற கருத்துரை ஒருபுறம் பாரம்பரியமான மெய்யியல் அணுகுமுறையைக் கண்டிப்பதுடன், மாக்ஸின் அபிப்பிராயப்படி புரட்சிக்கு இட்டுச்செல்வதைத் தவிர வேறுவழி மெய்யியலிற்கில்லை என்பதால், புரட்சியும் மெய்யியலும் ஒன்றிற்கொன்று நேரெதிரானவையென்ற முடிவிற்கு மாக்ஸை இட்டுச்சென்றது.

போயபார்க் பற்றிய கருத்துரையில் மாக்ஸ் புரட்சிபற்றிப் பேசுகிறாரே ஒழிய, வர்க்கப்போராட்டம் பற்றி எத்தகையகுறிப்பையும் தரவில்லை. புரட்சிபற்றிய மாக்ஸினது கண்ணோட்டத்தை ஜெர்மானிய மெய்யியலின் பெறுபேறாகவே கருதவேண்டும். அது மாக்ஸினால் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தோன்றல்ல. புரட்சிபற்றிய மாக்ஸினது மனதிலிருந்த கருத்து அக்கால பிரெஞ்சு மரபிற்குரியதென தற்கால ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன[7]. இளமைப் பருவத்தில் தீவிர சனநாயகவாதியாகவிருந்த மாக்ஸ், சமூகமறுமலர்ச்சி இயக்கங்களின் புனரெழுச்சி பூர்சுவாக்களின் குடியரசிற்கெதிரான சக்திகளாலும், குறிப்பாக நெப்போலியனின் சர்வாதிகாரத்தினாலும், தொடர்ச்சியான எதிர்ப்புரட்சிச் சக்திகளால் முறியடிக்கப்பட்டமையைக் கருத்திற்கொண்டு, அதனை மாற்றியமைக்க முயற்சியெடுத்தார். புரட்சிகர இயக்கம் உரியபலனைத் தரவேண்டின் அது முழுஐரோப்பிய அளவில் நடைபெறவேண்டுமெனவும், இடதுசாரிகளின் ஆர்வமும் ஆற்றலும் திரட்டப்பட வேண்டுமென்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தார். 19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கம்யூனிஸம் பற்றிய கருத்து முளைவிட ஆரம்பித்திருந்தது. கம்யூனிஸத்தை ஒருஊகமாகவோ, இலட்சியமாகவோ அன்றி பரிசோதனையாகவோ கருதாது புரட்சியின் தத்துவங்களைச் சரியாகப்புரிந்துகொண்டு செயற்படுத்துவதன்மூலம் அதனை அடைந்து கொள்ளலாமென்ற முடிவிற்கு மாக்ஸ் வந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக நடுவழிப்பாதையென ஒன்றில்லையென்ற முடிவிற்கு அவர் வந்திருந்தார். புரட்சி இடைநிறுத்தப்படுமாயின் பிற்போக்குச் சக்திகளே அதனால் நன்மையடையும். ஏலவேயுள்ள அரச இயந்திரத்தையே அவை பாதுகாக்க முயலுமென்பதுவும் மாக்ஸின் கருத்தாக இருந்தது. எனவே சறுகலில்லாது புரட்சியை முன்னெடுத்து அதனை முழுமைப்படுத்தவேண்டின், அப்புரட்சி சமூகப்புரட்சியாயிருத்தல் வேண்டுமென மாக்ஸ் அபிப்பிராயம் கொண்டிருந்தார்.

ஆனால் புரட்சியை முன்னெடுப்பவர் யார்? 1844ல் இங்கிலாந்து உழைப்பாளிகளின் நிலமை பற்றி ஏங்கல்ஸ் ஒருநூலை எழுதியிருந்தார். றைன் பத்திகையாசிரியராயிருந்த காலத்து மாக்ஸ் சிசிலிய நெசவாளிகளிடையே பெருமளவு நேரத்தைச் செலவழித்திருந்ததடன், அவர்களின் பிரச்சினை தொடர்பாக கட்டுரைகள் எழுதியிருந்தார். இவர்களெல்லோரும் கைத்தொழிற்புரட்சியினால் தொழிலாளர்களாக மாறியவர்கள். நகரங்களில் மிகநெருக்கமாக வறுமையின் பிடியில் சீவித்தனர். வேலை நிறுத்தங்களினால் ஆட்சியின் எதிர்ப்பாளர்களாகவும் மாறத் தொடங்கியிருந்தனர் அரசு கூடியசனநாயக தன்மையுடையதாய் இருத்தல் வேண்டுமென்ற ஆர்வத்தால் இத்தகையமக்களை, விமரிசன அணுகுமுறையுடைய அக்காலப் புத்திஜிவிகள் 'பொதுமக்கள்', என்ற பெயரால் அழைக்கத்தொடங்கினர். இப்பொதுமக்கள் ஏலவே அரசிற்கெதிரான போராட்டங்களைத் தொடங்கியிருந்ததால் அரசிற்கெதிரான அப்போராட்டங்களை புரட்சியாக மேற்கொள்ளுமாறு புத்திஜிவிகள் சிபார்சுசெய்தனர்.

மேற்குறித்தநிலைப்பாடு The Holy family (1844) என்றநூல் எழுதப்பட்டகாலத்திலிருந்து Communist Manifesto(1847) என்ற நூல் எழுதப்பட்டகாலம் வரையிலான மாக்ஸினது சிந்தனையிற் காணப்படுகிறது. பூர்சுவா அல்லது சிவில் சமூகம் கலைந்துபோவதை தொழிலாளர்கள் பிரதிபலிப்பதாக மாக்ஸ் இக்காலத்தில் கருதினார்.

1. சமூகம்பற்றிக் கூறும் அனைத்துத் தத்துவங்களுடனும் தொழிலாளர்களின் நிலமை முரண்படுவதும்,
2. தனிச்சொத்து,இலாபம், தேசப்பற்று, பூர்சுவா தனிமனிதவாதம் என்பனவற்றுடன் ஒத்திசையா விழுமியங்களை தொழிலாளர் கொண்டிருப்பதுவும்,
3. தொழிலாளர்களின் அரசிற் கெதிராக வளர்ந்துவரும் எதிர்ப்புணர்வும் மேற்படி முடிவிற்கு மாக்ஸ் வரக்காரண-மாயிற்றெனலாம்.

மாக்ஸ் தனதுசிந்தனையில் செயல் அல்லது நடைமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இதன் காரணமாக கற்பனாவாத நிலைப்பாட்டிற்கெதிரானவராய் இருந்தார். தனது கருத்துரையில் புரட்சிகரநடைமுறைக்கு முதன்மைஸ்தானத்தைக் கொடுத்தார். இதனாலேயே தனதுகாலத்தில் பிரபல்யமாயிருந்த மெய்யியல், சமூகவியல் கோட்பாடுகளிற்கு உரியவாறு சமூகமாற்றம் பற்றிச் சிந்திக்காது, நடைமுறைக்கே முக்கியத்துவம் கொடுப்பவராய்க் காணப்பட்டார். செயற்படுதலை நடைமுறையாக அர்த்தப்படுத்தியதுமட்டுமல்ல, வரலாறுபற்றிய பாரம்பரிய அணுகுமுறையான கடந்தகாலத்தின் அர்த்தத்தைத் தேடுதல் என்பதற்குப்பதிலாக செயற்படுவதற்கான மெய்யியலில் அக்கறை கொண்டிருந்தார். செயற்படுதற்கான மெய்யியலானது மோஸஸ் ஹேஸ்(Moses Hess) மற்றும் இளைய கேகலியவாதிகளின் சிந்தனையாகவிருந்தது. போயபார்க் எதிர்காலத்திற்கான மெய்யியல் என்றதொரு அறிக்கையையும் இக்காலத்தில் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மாக்ஸ் இதற்கப்பாற் சென்று செயற்படுதலென்பது நிகழ்காலத்திற் செயற்படுவதேயன்றி, செயற்படுதல் பற்றிய பிரகடனத்துடன் நின்று விடுவதில்லையென விமரிசனம் செய்தார். மெய்யியலை செயற்படுதல் பற்றிய மெய்யியலென கூறிக் கொண்டிருப்பதுடன் நின்றுவிடாது, நடைமுறையில் செயலாக வெளிப்படுதல் வேண்டுமென்றார். அத்தகையசெயற்பாடு புரட்சிகரத் தேவைகளுடனும், புரட்சிகர இயக்கங்களுடனும் நேரடியான தொடர்பைக் கொண்டிருக்க வேண்டுமென வாதிட்டார்.

காண்டினுடைய கடமையைச்செய்தல் என்ற நிலைப்பாட்டை பொருளுலகிற் செயற்படுதல் என அர்த்தப்படுத்தியதுடன், ‘இருப்பற்றது உண்மையற்றது’ என்ற கேகலின் தோற்றப்பாட்டியல் என்ற நூலிற் தெரிவிக்கப்பட்ட கருத்துடன் அதனை இணைத்து மாக்ஸ் பொருள்கொண்டார். மனிதனதும் பிரசைகளினதும் உரிமைகள்பற்றிய நவீனகால மெய்யியலாளர்களின் பிரகடனத்தை அரசியல்ரீதியாக இனங்கண்டு கொண்டதுடன், சமூகக் கோட்பாடுகளில் உள்ளடங்கிய இத்தத்துவங்களை பூர்சுவாசமூகம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒன்றில் அதனைப் புறக்கணித்தோ, அல்லது அதனுடன் முரண்பட்டோ வந்திருக்கிறதென்றும், இதனை மாற்றுவதாயின் இலட்சியவாதத்தை பொருள்முதல் வாதமாக தலைகீழாக மாற்றுவதன் மூலமே சாத்தியமாகுமெனக் கருதினார். இதனை விமரிசனம் என்ற ஆயுதத்தைப்பயன்படுத்தி மெய்யியலை விமர்சிப்பதனால் மாக்ஸ் நடைமுறைப்படுத்தினார். சடத்தின் நேரடித் தொடர்பின்றியதாகவே மாக்ஸினுடைய பொருள்முதல்வாதச் சிந்தனை காணப்பட்டது. மெய்யியல் பற்றியதும், சமூகம் பற்றியதுமான மாக்ஸினுடைய இப்பொருள் முதல்வாத நிலைப்பாடு 19ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் ஏங்கல்ஸினால் இயற்கைவிஞ்ஞான ஆய்வுகளின் ஊடாக சடப் பொருள் உலகுடன் இணைக்கப்பட்டது. இலட்சியவாத விமரிசனத்தினூடாகவே மாக்ஸினது பொருள் முதல்வாதச்சிந்தனை பெறப்பட்டதால், பாரம்பரிய பொருள்முதல்வாதச் சிந்தனையிலிருந்து வேறுபட்ட ஒன்றாக இருந்தது. இயற்கை, வரலாறு என்பன தொடர்பான இலட்சியவாதிகளுடைய வியாக்கியானங்கள் ஆன்மா, நியாயம், பிரக்ஞை, கருத்து என்பனவற்றை உள்ளடக்கியதாயிருந்தது. நடைமுறையில் இத்தத்துவங்கள் எத்தகைய புரட்சிக்கும் இட்டுச்செல்வதாய் இல்லை. போதனை சார்ந்த தொன்றாகவே இருந்தது (பிளேட்டோவின் இலட்சியஅரசு அரசர்களிற்கான ஆலோசனையாகவே மொழியப்பட்டதை இங்குநாம் கவனத்திற் கொள்ளலாம்). ஆனால் மாக்ஸினது பொருள்முதல்வாதமோ நடைமுறையென்ற தன்புரட்சிகர கருத்தாக்கத்தினால் பாரம்பரியமெய்யியற் சிந்தனைகள் அனைத்திலுமிருந்து வேறுபட்டிருப்பது மட்டுமல்ல, முற்போக்கான சிந்தனையாகவும் இருக்கிறது.

தொகுத்துநோக்கும்பொழுது, மாக்ஸினது பொருள்முதல் வாதச்சிந்தனையும், மெய்யியல் பற்றிய அவருடைய கண்ணோட்டமும் மெய்யியல் பற்றிய பாரம்பரிய விளக்கத்தினதும், போயபாக்கினது பொருள் முதல்வாதச் சிந்தனையினதும் விமரிசனமாகவே அமைந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

## அடிக்குறிப்புக்கள்

[1] **கால் மாக்ஸ், லூயி பொனபார்ட்டின் 18ம் புருமோர், முன்னேற்றப்பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்12.**

[2] Etienne balibar's book 'The Philosphy of Marx, Verso1995. P.7.

[3] Karl Marx, A Contribution to the Critique of Hegel's Philosophy of Right, Progress pub., Moscow1979.

[4] அல்தூஸர் 1918ல் அல்ஜீரியாவில் பிறந்து, பிராண்ஸில் 1990வரை வாழ்ந்தவராவார். மாக்ஸிசம் தொடர்பான தனது கோட்பாட்டுரீதியான ஆய்வுகளால் பிரபல்யமானவர். 1960-70 களில் For Marx, Reading Capital ஆகியநூல்களின் வெளியீட்டைத்தொடர்ந்து இவரதுகோட்பாடு மெய்யியலரங்கில் முக்கியவிவாதப் பொருளாயிற்று. இக்காலத்தில் அமைப்பியல்வாதப் பிரபல்யஸ்தர்களான லெவி ஸ்ரொசஸ், லக்கான், பூக்கோ ரோலன்ட் பர்த் என்பவர்களுடன் அல்தூஸரும் ஒருவராக வைத்து எண்ணப்படுகிறார். மாக்ஸிஸம் நெருக்கடிக்குள்ளாயிருக்கிறதென்பதை ஏற்றுக்கொண்டாலும் அந்நெருக்கடி சித்தாந்தரீதியான நெருக்கடியல்ல எனக்கொண்டு, மாக்ஸிஸத்தை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தினார். கோட்பாட்டுரீதியான மானிடவாதம், வரலாற்றுநிர்ணயவாதம் போன்ற சிந்தனைகளிற்கெதிராகவே மாக்ஸின் அரசியற்பொருள் முதல்வாதத்திற் கெதிரானவிமரிசனம் என்ற கட்டுரை உளதாக வாதிட்டார். அத்துடன் அக்கட்டுரையே விஞ்ஞானபூர்வமான வரலாற்றின் அடிப்படையெனவும் எடுத்துக்காட்டினார். மாக்ஸினது விஞ்ஞானமுறை பூர்சுவாக் கருத்தியலிற்கு எதிரானதாயிருக்கிற அதேவேளை, கருத்தியலின் பொருளியலானதும், வரலாற்று ரீதியானதுமான பாத்திரத்தை வகிக்கிறதெனவும் எடுத்துக்காட்டினார். வரலாற்றிற்கு எவ்வாறு முடிவில்லையோ அதேபோல கருத்தியலிற்கும் முடிவில்லையென்றார். அல்தூஸர் லெனினது மெய்யியல் தொடர்பான கருத்துரைகளை மீள்மதிப்பீடு செய்து வர்க்கப் போராட்டம் பற்றிய கோட்பாட்டுரீதியான விளக்கமேன Lenin and Philosophy and Other Essays என்றநூலில் வரையறுத்தார். இதனை பொருள்முதல்வாத செல்நெறி, இலட்சியவாதசெல்நெறி என்பனவற்றிற்கிடையிலான முரண்பாடாக Philosophy and the Spontaneous Philosophy of the Scientists என்றநூலில் எடுத்துக்காட்டினார். சீனக்கலாச்சாரப்புரட்சி,1968ல் பிராண்ஸில் எழுந்த மாணவ-தொழிலாளர் இயக்கங்களின் என்பனவற்றின் செல்வாக்குக் காரணமாக பிற்காலத்தில் அல்தூஸரின் சிந்தனையில் மாற்றங்கள் ஏற்பட்டன. Essays on Self Criticism என்ற அவரது பிற்காலநூல் ஸ்பினோஸாவின் செல்வாக்கிற்கு உட்பட்டது. எவ்வாறாயினும் மாக்ஸிசத்துற்கும் மானிடவாதத்திற்கும் இடையிலான வேறுபாட்டை மீளவலியுறுத்தியதுடன், கருத்தூநிலை பற்றிய பொதுக்கொள்கை யொன்றை அல்தூஸர் முன்வைத்தார். சமூகஉறவுகளின் மீளுட்பத்தியை உறுதிசெய்யுமுகமாக தனியார்/பொது நிறுவன அமைப்பிற்கும் தனிநபர்களிற்குமிடையிலான உறவாக கருத்துநிலை பற்றிய பொதுக்கொள்கை உளதென Essays on Ideology என்றநூலில் அல்தூஸர் எடுத்துக்காட்டினார்.

[5] போயபாக் கருத்துரைகள் பின்வருமாறு:

அ. இதுவரைகாலமும் உள்ள பொருள் முதல்வாதத்தின் பிரதான குறைபாடு புலன்வழிபெறப்படும் அறிவானது மனித நடைமுறைக்குரிய செயல் நோக்க முடையதென்பதை உணராது இருந் -தமையேயாகும். மனிதஅறிவென்பதே நடைமுறைப் பயன்பாடுடையது. போயபார்க் இதனை உணரவில்லை.

ஆ. தற்சார்பற்ற உண்மை மனிதசிந்தனைக்குப் பயன்படுமோ அல்லவோ என்பது கோட்பாடுசார்ந்த பிரச்சனையல்ல, அது நடைமுறைப் பிரச்சனையாகும்.

உண்மைநடைமுறைரீதியாக நிறுவப்படல் வேண்டும். உண்மையின் உலகிய-லானதன்மை நடைமுறைரீதியாகச் சிந்திப்பதிலேயே தங்கியுள்ளது. உண்மையை நடைமுறையிலிருந்து தனிமைப்படுத்தியாராய்வது ஒருபுலமை சார் முயற்சியேயல்லாது வேறல்ல.

இ. சூழ்நிலை மனிதனாலேயே மாற்றப்படுகிறதென்பதை மறந்தவர்களிற்கே சூழ்நிலையை மாற்றுவது தொடர்பான பொருள்முதல்வாத கோட்பாடுபற்றிப் போதித்தல் வேண்டும். சூழ்நிலையை மாற்றுதலும், தமது நடத்தையை மனிதர்கள் தாமே மாற்றிக் கொள்வதும் ஏககாலத்தில் நிகளுமென்பதை புரட்சிகரநடவடிக்யைால் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும்..

ஈ. சமயத்தை நிஜஉலகு, சமயஉலகென இரண்டாகப்பிரிப்பதிலிருந்து போயபார்க் தொடங்குகிறார். ஆனால் நிஜஉலகோ முரண்பாடுகள் நிறைந்ததென்பதை அவர் கவனிக்கத் தவறிவிட்டார். இம்முரண்பாட்டை புரட்சிகரநடைமுறையால் மட்டுமே மாற்றுதல் முடியும்.

உ. புலன்வழிக்கருத்து நடைமுறைக்குரிய தென்பதை போயபார்க் ஏற்கவில்லை.

ஊ. சமூக உறவுகளினடியாகவே மனிதசாராம்சம் பெறப்படுகிறது.

எ. சமயஉணர்வென்பதே சாராம்சத்தில் ஒருசமூகஉட்பத்திப்பொருளேன்பதை போயபார்க் உணரத்தவறிவிட்டார்.

ஏ. சமூகவாழ்க்கையென்பதே அடிப்படையில் நடைமுறைசார்ந்தது.

ஐ. பொருள்முதல்வாதத்தை நடைமுறைசார்ந்த கொள்கையாகக் கருதாமையும்.சிவில் சமூகத்தில் தனிமனிதன் என்ற கற்பனையும் கற்பனாவாத பொருள்முதல்வாதமாகும்.

ஒ. பண்டைய பொருள்முதல்வாதத்தின் நிலைப்பாடு சிவில் சமூகமாகும், புதிய பொருள்முதல் வாதத்தின் நிலைப்பாடு மனிதசமூகம் அல்லது ஒன்றிணைந்த மானிடம் என்பதாகும்.

ஓ. இதுவரைகாலமும் உள்ளமெய்யியலாளர்கள் உலகைப் பலவாறுவிளக்கினார்கள்.ஆனால் அதனை மாற்றுவதென்பதே முக்கியமானது.

[6] Etienne balibar's book 'The Philosphy of Marx, Verso1995. P.20.